1973 டிசம்பர் 3]

பாலாற்றில் ஊற்று நீர்

*** 578 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டைக்கு அருகே உள்ள பாலாற்றில் மண்மேடிட்டிருக்கும் மணல் குவியல்களை அகற்றி ஊற்று நீர் வசதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

திரு கே. எ. வகாப் : பாலாற்றுப் படுகையிலே நிறைய நீர் இருக்கிறது. அந்த நீரை எடுத்துக்கொள்வதையும், மேலும் பாலாற்றில் வெள்ளம் வருகிறபொழுது அந்த நீரைப் பெறுவதற்கு வசதியாக இருப்பதையும் தடுக்கின்ற மணல் குன்றுகளை அகற்றி, பாலாற்றின் பாழாறு என்ற பெயரை மாற்றி, அதை ஒரு நல்ல ஆறாக மாற்றுவதற்கு, விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மணல் குவியலைப் பயன் படுத்திக்கொண்டு கசத்திற்கு வாய்க்கால் வெட்டி, அங்கிருக்கிற விவசாயிகள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏதேனும் எடுத்துவிட்டால் கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் ஒன்றும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : மணல் குவியல்களை அகற்றிவிட்டால் வாலாஜா அருகில் கட்டுப்படுத்தி அணைக்கட்டில் நீரைத் தேக்கு வதற்கு வாய்ப்பில்லை. வருகிற நீர் அத்தனையும் கால்வாய்க்கு அப்படியே விடப்பட்டு விடுகிறது. அதைக் கொஞ்சம் ஸ்டோரேஜ் செய்து வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தால் கீழே ஊற்று வருவ தற்கு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் வட்டாரத்தைப் பற்றி தெரிந்தவர்கள். அங்கு இருக்கிற கால்வாயை நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) பிரச்னை அவர்களுக்குத் தெரியும் என்பதினாலே

சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நீரைத் தேக்கி வைப்பதற்கு, ஒரு பெரிய அணை போல கட்டி நீரைத் தேக்கி, மற்ற கால்வாய்களுக்கு விடுவதற்கு ஒரு திட்டத்தை அமைப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வாலாஜா அணைக்கட்டு பற்றி தெரியும். ஆனால் அதன் முழு நிலைமை எனக்குத் தெரியாது. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

பயணியர் விடுதிகள்

* 579 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னதாராபுரம் பயணியர் விடுதி பழுதுபட்டிருப்பதைச் சீர்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சின்ன தாராபுரத்திலுள்ள பயணியர் விடுதியைப் பழுது பார்த்துச் செப்பனிடுவதற்காக ரூ. 3,950-க்கு புதுக்கோட்டை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை துறை) அனுமதி வழங்கியிருக்கிறார். நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, இவ்வேலை இவ்வாண்டிலேயே நடைபெறும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சின்ன தாராபுரத்தில் உள்ள பயணியர் விடுதி மிகப் பெரிய பல அறைகளைக் கொண்டது. பல அறைகள் பழுதுபட்டிருக்கின்றன. ரூ. 3,000 அளவில் ஒன்றும் பழுது பார்க்க முடியாது. ரூ. 30,000 அளவுக்குத் தேவைப்படும். அந்த வட்டாரத்தில் வேறு பயணியர் விடுதி இல்லை. அது ஒரு நல்ல இடம், நல்ல கட்டடம். அதைச் சரிவர பழுதுபார்த்து பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றிய முழு விவரமும் என்னிடத்தில் இல்லை. கோட்டப் பொறியாளர் ரூ. 3,950-க்கு ஒரு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியதாக என்னிடம் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு என்னிடம் தகவல் இல்லை.